**கலவைக் கல்லூரி அரசு மேல்நிலைப் பள்ளி கட்டிடத் திறப்பு விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை.**

இடம் : மிஷன் வீதி, புதுச்சேரி                                  தேதி : 30-04-2025

**அனைவருக்கும் வணக்கம்.**

சுமார் 150 ஆண்டு கால பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க கலவைக் கல்லூரியின் புதுப்பிக்கப்பட்ட பிரெஞ்சு பாரம்பரிய பள்ளி கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இந்த நிகழ்வு - வெறும் கட்டிடத்தை புதுப்பித்து திறப்பு அல்ல. இது நம்முடைய வரலாற்றின் ஒரு பக்கத்தை நாம் திருப்பி பார்க்கின்ற ஒரு சிறப்பான தருணம். காலத்தின் ஓட்டத்தை கடந்து, கல்வியின் பெருமையை எடுத்து சொல்லும் பள்ளியை நம்முடைய நினைவுக்கு கொண்டு வரும் நிகழ்வு.

இந்த பள்ளியின் வரலாறு பற்றி தெரிந்து கொண்டேன். பள்ளிகளில் பிரெஞ்சு பிள்ளைகள் மட்டும் படிக்க அனுமதிக்கப்பட்ட காலத்தில், தமிழ் பேசும் புதுச்சேரி குழந்தைகளும் படிக்க வேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையில் கலவை சுப்பராய செட்டியார் தந்த பெருங்கொடை இந்த பள்ளி. தொடக்கப் பள்ளியாக தொடங்கப்பட்டு இன்று உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்து இருக்கிறது.

...2/-

முதலில் இரண்டு வருடம் FRENCH அரசின் நிதி உதவி பெற்று பிறகு அரசு பள்ளியாகவே மாறி இருக்கிறது. அந்த காலத்திலேயே இந்த பள்ளியில் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு இருக்கிறது. **நம்முடைய திட்டங்களுக்கு எல்லாம் முன்னோடி.** இதில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால், இந்த இடம் இதற்கு முன் ஒரு கல்லறையாக இருந்ததாம். ஒரு கல்லறையாக இருந்த இடம் இன்று ஒரு கல்வி கோயிலாக உயர்ந்து நிற்கிறது.

இந்த பள்ளி, தனக்குள்ளே ஒரு வரலாறை கொண்டு இருக்கிறது. FRENCH ஆட்சிக்கு எதிராக நடந்த முதல் மாணவர் போராட்டம் இந்த பள்ளியில் தான் தொடங்கி இருக்கிறது. பிறகு அது INDO-FRENCH விடுதலைப் போராட்டமாக மாறி இருக்கிறது.

150 ஆண்டுகள் என்பது சாதாரண காலமல்ல. இந்த கால ஓட்டத்தில் இந்த பள்ளி இன்றுவரை பல தலைமுறைகளுக்கு கல்வி தந்திருக்கிறது. நம்முடைய கல்வி வளர்ச்சிக்கும் கலாச்சாரத்திற்கும் இன்றும் ஒரு சாட்சியாக இருக்கிறது. இந்த பள்ளியில் படித்தவர்கள் உலக அளவில் வளர்ந்து இருக்கிறார்கள். இன்றும் பல உயரிய பதவிகளில் இருக்கிறார்கள்.

இதற்கு அப்பால், புதுப்பிக்கப்பட்ட இந்த கட்டிடம் ஒரு முக்கிய செய்தியை நமக்கு சொல்கிறது. நாம் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். பாரம்பரியமும் நவீன தொழில்நுட்பமும் இணைந்து செயல்பட வேண்டும்.

...3/-

FRENCH கட்டிடக்கலை, பாரம்பரியம், தமிழரின் மரபு ஆகியவை மாறாமல் இது புதுப்பிக்கப்பட்டு இருப்பது மகிழ்ச்சியை தருகிறது. பாரம்பரியத்தை மீட்டு எடுக்க மத்திய-மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த முயற்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இன்று, பழைய மாணவர்கள், கல்வி ஆர்வலர்கள் உள்ளூர் மக்கள் அனைவரும் இதைப் பெருமையோடு பார்க்கிறார்கள்.

கல்வி வளர்ச்சியில், தரமான கல்வியை வழங்குவதில், கல்வி உள்கட்டமைப்பு ஏற்படுத்தி தருவதில் புதுச்சேரி மாநிலம் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வருவது நம் அனைவருக்கும் தெரியும். மத்திய அரசின் கல்வித் திட்டங்களும் மாநில அரசின் திட்டங்களும் புதுச்சேரியில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக முதலமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளை நான் மனதார பாராட்டுகிறேன்.

நம்முடைய பள்ளிகளில் உள்ள (LEARNING RESOURCE CENTRES) கற்றல் வள மையங்களை NCERT பாராட்டி இருக்கிறது. மற்ற மாநிலங்களில் இருந்து கல்வியாளர்கள் இங்கே வந்து பயிற்சி எடுத்து செல்கிறார்கள். தேசிய அளவில் கல்வி உள்கட்டமைப்பை வலுப்படுத்த நாம் எடுத்து வரும் முயற்சிக்கு இது உதாரணம்.

SMART CITY திட்டத்தின்கீழ் ஏற்கனவே VOC பள்ளி புதுப்பிக்கப்பட்டது. இப்போது CALVE COLLEGE.

...4/-

இதுபோன்ற இன்னும் சில கட்டிடங்கள் புதுப்பிக்கப்படும். கல்வி வளர்ச்சிக்கு அதற்கான உள்கட்டமைப்பு வசதி, மகிழ்ச்சியான - சுகாதாரமான சூழல் மிகவும் அவசியம்.

அதன் அடிப்படையில், நம்முடைய கலாச்சாரத்தையும் கல்வியையும் பாதுகாக்க இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுக்கும் என்ற நம்பிக்கையை தந்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி... வணக்கம்.**